1984 மார்ச் 28]

சூழ்நிலை இருக்கிறது. இதற்காக மத்திய அரசு அனுமதி வழங்கக் கூடிய நிலையில் இருக்கின்ற காரணத்தால், மத்திய அரசின் அனுமதியை எதிர்நோக்கி கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

496 —

அம்பத்தூர் தொழிற்பேட்டையிலுள்ள மனைகள்.

*வினா எண் 19011—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தொழில் துவங்கும் இடங்களின் விலையை அரசு அதிக அளவில் உயர்த்தி விட்டதாகப் புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) ஆம்.

(ஆ) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் மேம்படுத்தப் பட்ட மனைகளின் விலையை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3.00 இலட்சமாக அரசு உயர்த்தியது. இதனை ரூ. 30,000 என்று குறைக்கும்படி அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கமும், ரூ. 50,000 என்று குறைக்கும்படி தமிழ்நாடு சிறுதொழில்கள் சங்கமும் அரசை கேட்டுக் கொண்டன.

(இ) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 19.274 ஏக்கர் நிலம் மட்டுமே ஏக்கருக்கு ரூ. 3.00 இலட்சம் என்ற விலையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத் தொழிற்பேட்டையில் தற்போது சுமார் 10.05 ஏக்கர் நிலம் மட்டுமே காலியாக உள்ளது அம்பத்தூர் தொழிற்பேட்டையைக் காட்டிலும் சென்னை நகருக்கு அருகில் உள்ள வில்லிவாக்கம் அரும்பாக்கம் தொழிற்பேட்டைகளில் உள்ள நிலங்களின் விலையை அனுசரித்தே அம்பத்தூர் தொழிற்பேட்டையில் நிலத்தின் விலை நிர்ணயிக்கப் பட்டது. இந்த விலை நியாயமானதே என்று அரசு கருதியதால் அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு சிறு தொழில்கள் சங்கம் ஆகியவற்றின் கோரிக்கை மீது அரசு மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் நிர்ணயித்து இருக்கின்ற விலை நியாயமானது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஒருக்கால் இன்றைய மார்க்கெட்டுக்கு அது நியாயமாகக் கூட இருக்கலாம். ஆனால் புதிதாக நிறைய பேர்கள் தொழில் செய்ய முன்வரவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அப்படித் தொழில் செய்ய வருபவர்களுக்கு, அதிலும் புதிதாக வருபவர்களுக்கு அல்லது பின் அடைந்த நிலையில் உள்ள வகுப்பினர்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு என்று இப்படி யாராவது முன் வந்தால், அவர்களுக்குச் சலுகைகள் காட்டுகின்ற வகையில், அவர்களுக்கு மட்டும் விலை நிர்ணயம் செய்வதிலே ஒரு தனித் திட்டத்தை அரசாங்கம் கடைப்பிடிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சலுகை காட்டும் திட்டம் எதுவும் தற்போது இல்லை, ஆனால் அதனுடைய விலை நிர்ணயிக்கின்றபோது, அடுத்த தொழிற்பேட்டையில் உள்ள நிலத்தினுடைய விலையைப் பார்த்து அதற்குத் தகுந்தாற்போல் இந்த இடத்தின் விலையும் நிர்ணயிக்கப்படுகின்றது,

தஞ்சை மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்.

497 —

*வினா எண். 22031—திரு, இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம். விவசாயிகள் அதிகமாகவுள்ள பகுதி. அந்தப் பகுதியில் பெரிய தொழில்கள் செய்யக்கூடிய தொழில் பேட்டைகள் அமைக்க திட்டம் எதுவும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவ்வாறு தொழிற்பேட்டை என்று இல்லாவிட்டாலும், சிறு தொழில்கள் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.